3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன புகழேந்தி? சொல்லுங்கள்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை, வாணியம்பாடியில் நடைபெறவிருக்கின்ற தேர்தல்கள் குறித்து தேர்தல் கமிஷன் அறிவிப்புக்குப் பிறகு..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு என் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள் (குறுக்கீடு) கவன ஈர்ப்பு என் ஆய்வில் இருக்கிறது. என் அறைக்கு வாருங்கள், அதைப் பற்றிப் பேசலாம். திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புக்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. என் ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள் அதைப் பற்றிப் பேசலாம். திரு. ஞானசேகரன் (குறுக்கீடு) கவன ஈர்ப்பு என் ஆய்வில் இருக்கிறது. சொல்லிவிட்டேன். உட்காருங்கள். திரு. புகழேந்தி, உட்காருங்கள், திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். இப்படித் தேவையில்லாமல் குழப்பம் விளைவிக்கக் கூடாது. திரு. புகழேந்தி, கவன ஈர்ப்புக்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. என் ஆய்வில் இருக்கிறது. சொல்லிவிட்டேன். மறுபடியும் ஏன் இப்படித் தகராறு பண்ணுகிறீர்கள். உட்காருங்கள். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் எல்லாம் ஒத்திவைக்கப்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். என்னுடைய அறைக்கு வந்து பேசுங்கள். (குறுக்கீடு) கையை

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 23

நீட்டிப் பேசுவது முறையல்ல. உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) பொன்முடி, நேற்றே நீங்கள் இரண்டு பேரும் பேசிய பேச்சுகள் சரியில்லை. முறைகேடாக நீங்கள் பேசுகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள். இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேற்றே நீங்கள் இரண்டு பேரும் முறைகேடாகப் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) துரைமுருகன் அவர்கள் அப்போது அவையில் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் நேற்று அவையில் இல்லை. (குறுக்கீடுகள்)

(திரு. பரிதி இளம்வழுதி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உட்பட பல தி.மு.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் இருக்கை முன்பு தரையில் அமர்ந்தனர்.)

(ஆ) வேலூர் மாவட்டத்தில் அதிகாரிகள் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது பல, உங்களுடைய ஆய்வில் நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள். நான் அதற்கு மறுப்புச் சொல்லவில்லை. ஆனால், இது தேர்தலை முன்னிட்டு, வாணியம்பாடியிலும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: இருக்கின்ற அதிகாரிகளை மாற்றியிருக்கிறார்கள், என்றும், 18 ஆம் தேதி வேலூர் மாவட்டத்தில் உத்தரவு போட்டு, 19-ஆம் தேதி காலையிலேயே அந்த B.D.O.-க்கள் மாற்றம் serve செய்த காரணத்தால் அவர்கள் 18-ஆம் தேதி வரையிலே நாங்கள் வேலை செய்திருக்கிறோம். எனவே நாங்கள் எப்படி மாறிப்போக முடியும்? 12 ஆம் தேதியே relieve ஆனதாக அவர்கள் வற்புறுத்தப்படுகின்ற காரணத்தால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், அதெல்லாம் எடுத்துக் கொண்ட பிறகு பேச வேண்டியது.

திரு. துரைமுருகன்: நான் உள்ளே போகவில்லை. சொல்லியிருக்கிற காரணத்தால், இதற்கு நீங்கள் ஒரு தனி முக்கியத்துவம் கொடுத்து இந்தக் கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்வது சரியாக இருக்குமென்ற எனது வேண்டுகோளைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.